# ‘தி வீக்’ ஆங்கில வார இதழ் நிகழ்ச்சியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!

## முதல் பக்கத் தொடர்ச்சி

எங்கள் மேல் பொய் பரப்புபவர்களுக்கு பதிலடி கொடுப்பது மாதிரி, இந்து சமய அறநிலையத்துறை சார்பில் 4 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கோயில் களில் குடமுழுக்கு நடத்தியிருக்கிறோம். மாற்றுத்திறனாளிகளுக்கு உள்ளாட்சி அமைப்புகளில் இட ஒதுக்கீடு வழங்கியிருக்கிறோம்.

### இந்தியாவின் முதன்மை மாநிலமாக தமிழ்நாடு!

இவை எல்லாவற்றிற்கும் மேல், இந்த ஆட்சியே மகளிர் மற்றும் மாணவர்களுக்கான ஆட்சி என்று சொல்லும் அளவிற்கு ‘திராவிட மாடல்’ அரசின் முத்திரைத் திட்டங்கள் எல்லாமே அவர்களுக்காகதான் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. அதில் சிலவற்றை மட்டும் நான் உங்களுக்கு நினைவுப்படுத்த விரும்புகிறேன்.

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், விடியல் பயணம், புதுமைப்பெண், தமிழ்ப்புதல்வன், நான் முதல்வன், கல்லூரி மாணவர்களுக்கு லேப்டாப், காலை உணவுத் திட்டம், தோழி விடுதிகள் என நிறைய இருக்கிறது. என்னால் உறுதியாக சொல்ல முடியும், இத்தனை முத்திரைத் திட்டங்களை வெற்றிகரமாக செயல்படுத்தும் வேறு மாநில அரசு இந்தியாவிலேயே நிச்சயமாக இருக்க முடியாது. சிறிய குளறுபடி, குழப்பம் கூட இல்லாமல், தேவையானவர்களுக்கு கிடைப்பது மாதிரி சரியாக செயல்படுத்தி வருகிறோம்.

இதையெல்லாம் யாரும் மறைக்கவோ மறுக்கவோ முடியாது. எல்லாமே Concrete Development! அதனால்தான் கண்கூடாக பார்க்கலாம் என்று ஆரம்பத்திலேயே சொன்னேன். அடுத்து நம் பார்ஸ்-க்கு வருகிறேன்.

நாங்கள் இப்படி All Rounder-ஆக அடித்து ஆடுவதால்தான், இந்தியாவிலேயே பொருளாதார வளர்ச்சியில் நம்பர் ஒன் மாநிலம் தமிழ்நாடு என்று ஒன்றிய பா.ஜ.க. அரசே பாராட்டி சொல்லியிருக்கிறது. நம்பர் ஒன் மாநிலம் மட்டுமல்ல; இரட்டை இலக்க வளர்ச்சியை எட்டிய ‘One and Only’ மாநிலமும் நம்முடைய தமிழ்நாடுதான். பொருளாதார வளர்ச்சியில் மட்டுமல்ல; Human Development Index-லும் இந்தியாவின் முதன்மை மாநிலமாக தமிழ்நாடு இருக்கிறது என்பதுதான் எங்களின் பெருமைக்குரிய தனித்தன்மையாக விளங்கிக்கொண்டிருக்கிறது!

### நெருக்கடியை மீறி சாதித்திருக்கிறோம்!

இந்தியா முழுவதும் பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில், அதாவது டபுள் எஞ்சின் என்று அவர்கள் சொல்லும் டப்பா எஞ்சின் ஓடும் மாநிலங்களில் இப்படி ஒரு வளர்ச்சியை காட்டிட முடியுமா? முடியவே முடியாது! அவர்கள் செய்வதெல்லாம் வன்முறை, வெறுப்பு பேச்சு, பிற்போக்குவாதம். இதற்கு அப்படியே நேர்மாறான, முற்போக்கு அரசு எங்கள் ‘திராவிட மாடல்’ அரசு.

முக்கியமாக நீங்கள் குறித்துக்கொள்ள வேண்டியது, நாங்கள் செய்த சாதனைகளையெல்லாம் ஒன்றிய அரசின் உதவி இல்லாமலேயே சாதித்திருக்கிறோம். இன்னும் சொல்ல போனால் அவர்களின் நெருக்கடிகளை மீறி சாதித்திருக்கிறோம்.

2021-ஆம் ஆண்டிலேயே பத்தாண்டுகளுக்கான Vision-னோடுதான் நான் வந்தேன். ஸ்டாலினின் ஏழு உறுதிமொழிகள் என்று 2031 வரைக்குமான தொலைநோக்கு குறிக்கோள்களை சொல்லிவிட்டுத்தான் முதலமைச்சராக நான் பொறுப்பேற்றேன். நான் நினைத்ததை விட, அதிக வேகத்தில் அதைநோக்கி பயணித்துக் கொண்டிருக்கிறோம். அண்மையில் வெளியான மாநில பொருளாதார ஆய்வறிக்கையும் அதைத்தான் சொல்கிறது.

“தமிழ்நாடு இதே வளர்ச்சியை தக்க வைத்துக்கொண்டால், ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரம் என்ற இலக்கை அடையும்” என்று அதில் சொல்லியிருக்கிறார்கள். அதனால், என்னுடைய Vision-யை Reality-ஆக மாற்றுவதற்கு, அடுத்த 5 ஆண்டுகளும், இதே ‘Mission Mode’-இல் நாங்கள் உழைப்போம். என்னை பொறுத்தவரை, மக்களின் தேவையறிந்து திட்டங்களை நிறைவேற்றியிருக்கிறேன். மக்கள் சொல்லும் குறைகளை மட்டுமல்ல; எதிர்க்கட்சிகள் சொல்லும் குறைகளையும் காது கொடுத்து கேட்டு அதை சரி செய்கிறேன்.

> ❖ ஒன்றிய அரசின் நெருக்கடிகளை மீறி சாதனைகளைச் சாதித்திருக்கிறோம்.
>
> ❖ தி.மு.க. ஆட்சி என்றால் வளர்ச்சி! வளர்ச்சி என்றால் தி.மு.க. ஆட்சி!
>
> ❖ தேர்தல் நேரத்தில் பொய் மூட்டைகளை அள்ளி வீசுகிறார் பிரதமர் மோடி!
>
> ❖ யாருக்கு யார் தலைமை என்று கூட தெரியாத ஒரு கூட்டணி!
>
> ❖ மதுரவாயல் – துறைமுகம் மேம்பாலப் பணிகளுக்குத் தடை போட்ட அ.தி.மு.க.

நேற்று மதுரை வந்த பிரதமர் மோடி அவர்கள், மதுரவாயல் - துறைமுகம் மேம்பாலப் பணிகள் தாமதம் பற்றி குற்றம் சாட்டி அதை குறிப்பிட்டு பேசியிருக்கிறார். அவர் கூட்டணி வைத்திருக்கும் அ.தி.மு.க.தான் இந்த திட்டம் வரக்கூடாது என்று தடை செய்தார்கள். வழக்கிலும் வாதாடினார்கள். இந்த பணிகள் நாங்கள் வந்து, இந்த ஒன்றிய அரசிடம் சொல்லி இப்போதுதான் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது.

### தேர்தல் நேரத்தில் பொய் அவிழ்ப்பு!

தி.மு.க. ஆட்சி என்றால் வளர்ச்சி! வளர்ச்சி என்றால் தி.மு.க. ஆட்சி! என்பது தமிழ்நாட்டு மக்களுக்கு நன்றாகத் தெரியும். இருந்தாலும், பிரதமர் மோடி அவர்களுக்கு சொல்ல சாதனைகள் இல்லாததால், தேர்தல் நேரத்தில் பொய்யை அவிழ்த்துவிட்டிருக் கிறார்.

இதைவிட பெரிய காமெடியும் நேற்று மேடையில் அவர்கள் பேசும்போது நடந்தது. என்னவென்றால், பழனிசாமி அவர்கள் ‘அ.தி.மு.க. ஆட்சி அமைக்கும்’ என்று சொல்கிறார். அவரை மேடையில் வைத்துக்கொண்டே, பிரதமர் மோடி அவர்கள் ‘NDA ஆட்சி’ அமையும் என்று சொல்கிறார். யாருக்கு யார் தலைமை என்றே தெரியாமல்தான் இவர்கள் கூட்டணி இருக்கிறது.

அதனால்தான், நான் என்னுடைய பிரசாரத்தை தொடங்கியபோதே இந்த தேர்தல் ‘Tamil Nadu Vs NDA’ என்று தெளிவாகச் சொன்னேன்.

### தமிழ்நாடு அணியா? டெல்லி அணியா? நிச்சயம் தமிழ்நாடு வெல்லும்!

இதை நான் சொன்னபோது சிலர் கேள்வி எழுப்பினார்கள். ஆனால், பிரதமர் மோடி அவர்களும் உள்துறை அமைச்சர் அமித் ஷா அவர்களும் ஒவ்வொருமுறை தமிழ்நாட்டிற்கு வரும்போதும் நான் சொன்னதை உறுதிப்படுத்தி செல்கிறார்கள்.

தமிழ்நாடு அணியா, டெல்லி அணியா என்ற இந்த தேர்தலில் நிச்சயம் தமிழ்நாடு வெல்லும்! அந்த திராவிட மாடல் 2.0-வில் எங்கள் Record-யை நாங்களே Beat செய்வோம்!

இந்த இனிய நிகழ்ச்சியில் என்னுடைய கருத்துகளை பகிர்ந்துகொள்ள வாய்ப்பை ஏற்படுத்தி தந்திருக்கும் ‘தி வீக்’ குழுமத்திற்கு நன்றி.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

### இ. கருணாநிதி எம்.எல்.ஏ. தலைமை! பல்லாவரம் சட்டமன்றத் தொகுதியில்

# முதலமைச்சர் - கழகத் தலைவர் பிறந்தநாள் விழா 5 ஆண்டு சாதனைகள் விளக்க மாபெரும் பொதுக்கூட்டம்!

### திண்டுக்கல் ஐ.லியோனி – டி.ஆர்.பாலு எம்.பி., அமைச்சர் தா.மோ.அன்பரசன் சிறப்புரை!

பல்லாவரம் மார்ச் 3-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் பல்லாவரம் சட்டமன்றத் தொகுதியில் இன்று 3-3-2026 செவ்வாய்க்கிழமை மாலை 5 மணி அளவில் அஸ்தினாபுரம் ராஜேந்திர பிரசாத் சாலை ஒட்டி உள்ள பெரியார் சாலையில் குமரன் குன்றம் பேருந்து நிறுத்தும் அருகில் பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி சார்பில் தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் 73 வது பிறந்தநாள் விழா திராவிட மாடல் நல்லாட்சியின் 5 ஆண்டு சாதனைகள் விளக்க மாபெரும் பொதுக் கூட்டம் மாவட்ட கழகத் துணைச் செயலாளரும் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி தலைமையில் செம்பாக்கம் வடக்கு பகுதி கழகச் செயலாளர் ஏ. கே. கருணாகரன் வரவேற்பில் மண்டல தலைவர் பம்மல் தெற்கு பகுதி கழகச் செயலாளர் வே. கருணாநிதி மண்டலத் தலைவர் பல்லாவரம் வடக்கு பகுதி கழக செயலாளர் இ. ஜோசப் அண்ணாதுரை பம்மல் வடக்கு பகுதி செயலாளர் த. ஜெயக்குமார் பல்லாவரம் தெற்கு பகுதி கழகச் செயலாளர் இ.எஸ். பெர்னார்ட் புனித தோமையார் மலை ஒன்றிய கழகச் செயலாளர் ஜி. கே. விவேகானந்தன் என்கிற ரவி ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ள மாபெரும் பொதுக் கூட்டத்தில் தமிழ்நாடு பாடநூல் கல்வியியல் நிறுவனம் தலைவரும் கழகக் கொள்கை பரப்பு துணைச் செயலாளருமான கலைமாமணி நகைச்சுவைத் தென்றல் திண்டுக்கல் ஐ. லியோனி கழகப் பொருளாளர் நாடாளுமன்ற மக்களவை குழு தலைவர் டி. ஆர். பாலு காஞ்சி வடக்கு மாவட்ட கழக செயலாளர் சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் மாண்புமிகு தா.மோ. அன்பரசன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்ற உள்ளார்கள் மேலும் கழக தீர்மான குழு செயலாளர் மீ. அ. வைத்தியலிங்கம் மாநகரச் செயலாளர் தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ். ஆர். ராஜா தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி துணை மேயர் கோ. காமராஜ் பல்லாவரம் தொகுதி பார்வையாளர் ரபி அஹமத் தொமுச பொன்ராம் தகவல் தொழில்நுட்ப துணைச் செயலாளர்கள் அ. தமிழ்மாறன் என்.நவீன் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கோல்டு டீ. பிரகாஷ் பொதுக்குழு உறுப்பினர் மு.ரஞ்சன் மாநகரத் துணைச் செயலாளர் இரா. நரேஷ் கண்ணா எம். சி.மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் பேராசிரியர் எல்.பிரபு மாவட்ட தகவல் தொழில்நுட்ப ஒருங்கிணைப்பாளர் வி. ரவிச்சந்திரன்மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் கோ. ஜானகிராமன் பம்மல் வீ. தினேஷ் மாநகர இளைஞரணி அமைப்பாளர் பி.கே.ஏ சத்தியபிரபு மாவட்ட கழக பிரதிநிதிகள் க. ரமேஷ் த. ராஜாராமன் கே. தனசேகரன் பா. டெல்லி எஸ்.செல்வம் ஒன்றிய கழக நிர்வாகிகள் கே. செல்வராஜ் ஆர். ராஜா மாவட்ட கவுன்சிலர் ச. மனோகர் பொழிச்சலூர் ஊராட்சி மன்ற தலைவர் பா. வனஜா தயாளன் திரிசூலம் ஊராட்சி மன்ற தலைவர் உஷா மாரிமுத்து பொழிச்சலூர் ஊராட்சி துணைத் தலைவர் வி. ஜோசப் திரிசூலம் ஊராட்சி மன்ற துணைத் தலைவர் அமுதா அந்தோணி ஒன்றிய கவுன்சிலர்கள் எஸ். சௌமியா சாய் செல்வக்கனி செல்வராஜ் மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ச.பிரபு ஜெ. இன்சாமாம் நகர முன்னாள் இளைஞர் அணி அமைப்பாளர் வி. என். சிலம்பரசன் மாநகர மாணவரணி துணை அமைப்பாளர்கள் எம். இளவரசன் ஏ. செந்தில்குமார் ஆர். ஜோஸ் பிரபு பா. வினோத்குமார் இரா. முரளிதரன் மாவட்ட தகவல் தொழில்நுட்ப துணை ஒருங்கிணைப்பாளர் டிபி ராஜலிங்கம் சென்னை மாநகராட்சி 159 ஆவது வார்டு ஜெயா செல்வம் ப.கிருஷ்ணமூர்த்தி அமுதப்பிரியா எம். சி. மற்றும் அணிகளின் மாவட்டத் துணை அமைப்பாளர்கள் மாநகர அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் பகுதி கழக நிர்வாகிகள் மாமன்ற உறுப்பினர்கள் வட்ட கழகச் செயலாளர்கள் பகுதி அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்கள் இறுதியில் செம்பாக்கம் வடக்கு பகுதி இளைஞரணி அமைப்பாளர் எல். டில்லி பாபு நன்றி உரை ஆற்றுகிறார்

---

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் க.வினோத் தலைமை!

# எழும்பூர் மகப்பேறு மருத்துவமனையில் மார்ச் 1 அன்று பிறந்த குழந்தைகளுக்கு தங்க மோதிரம்!

### கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அணிவிக்கிறார்! மேயர் பிரியா ராஜன் - தயாநிதி மாறன் எம்.பி. பங்கேற்பு!

சென்னை, மார்ச். 03

சென்னை கிழக்கு மாவட்டம், மக்கள் முதல்வரின் மனிதநேய விழா 2026 மனிதநேய 27, தமிழரின் வாழ்வில் ஒளி பிறந்தது! சரித்திரம் தொடர நிலம் மலர்ந்தது! எனும் தலைப்பில் இன்று (03.03.2026 செவ்வாய்க்கிழமை) காலை 11 மணி அளவில், எழும்பூர் மகப்பேறு மருத்துவமனையில் மார்ச் 1 அன்று பிறந்த குழந்தைகளுக்கு தங்க மோதிரம் அணிவித்தல் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் க. வினோத் தலைமை வகிக்கிறார்.

மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பகுதிக் கழகச் செயலாளர்கள் வி.சுதாகர், சொ.வேலு எம்.சி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வானவில் விஜய், கோ.ஏகப்பன், கே.எஸ். எம்.நாதன், புனிதவதி எத்திராசன், ராஜேஸ்வரி ஸ்ரீதர் எம்.சி, கோ.மணி, புரசை ஜி.தாமோதரன், வே.உமாகாந்த், க.நந்தீஸ்வரன், அ.நிர்மலா தேவி, எல். சுந்தர் ராஜன், கே.கோகுல் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

ஜெ.பாலமுருகன், பா.ஜெகதீஷ், எஸ்.தனசேகர், ஜி. ஜெ.பிரபு, ஆர்.டி.சங்கர் நானா, த.ஜெயக்குமார், பா. பிரபாகரன், இ.பி.கார்த்திக், என்.ஜெ.மதன்குமார், ஆ. அஜித்குமார் (எ) ஜெபா, ஏ. ஆர்.யாசர் அரபாத், பி.டெல்லி கணேஷ், சே.பாலாஜி, ரா. கார்த்திக், பா.சங்கர், ஐ.சூரியா, அ.அவினேஷ், கோ.சந்தோஷ் குமார், மு.முகமது பிலால், லோ.சுகுமாரன், ஜெ.சிலம்பரசன் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

மார்ச் 1 அன்று பிறந்த குழந்தைகளுக்கு தங்க மோதிரத்தினை கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அணிவிக்கிறார்.

இந்நிகழ்ச்சியில் மேயர் பிரியா ராஜன் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே.எஸ்.ரவிச்சந்திரன், செய்தி தொடர்பு துணைச் செயலாளர் தமிழன் பிரசன்னா, மண்டலக் குழுத் தலைவர் கூ.பீ.ஜெயின், ப.மீ. யாழினி, பரிதி இளம் சுருதி எம்.சி. மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

வட்டக் கழகச் செயலாளர்கள் டால்பின் எஸ்.ஹரி, இ. மொய்தீன் ஆகியோர் நன்றியுரை ஆற்றுகின்றனர்.



திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஆவடி மாநகராட்சி பல்வேறு வார்டுகளில் 1 கோடி 93 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய சாலை அமைக்கும் பணி குளம் சீரமைக்கும் பணி துவக்க விழா புதிய பள்ளி கட்டிடம் பூங்கா ரேஷன் கடை திறப்பு விழா நடைபெற்றது. இதில் அமைச்சர் ஆவடி சாமு. நாசர் தொடங்கி வைத்து பல்வேறு வார்டுகளில் உள்ள ஆவடி மாநகராட்சி தொடக்கப்பள்ளியில் நாற்காலி மேசை வழங்கினார். உடன் மாநகர மேயர் உதயகுமார், மாநகர ஆணையர் சரண்யா, துணை மேயர் சூரியகுமார், மாநகரப் பொறுப்பாளர் சண் பிரகாஷ், பேபி சேகர், பொன் விஜயன், நாராயண பிரசாத், ஜோதிலட்சுமி நாராயண பிரசாத், அமுதா பேபி சேகர், உள்பட பலர் உள்ளனர்.

---

# சென்னை தெற்கு மாவட்டக் கழக ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் – அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவிப்பு!



சென்னை தெற்கு மாவட்டக் கழக ஆலோசனைக் கூட்டம் நாளை (4.3.2026) புதன்கிழமை மாலை 5 மணியளவில் வேளச்சேரி, விஜய நகர் “ஃபோர் பாயின்ட்ஸ்” செரட்டன் (சென்னை சில்க்ஸ் அருகில்) ஹோட்டலில், மாவட்ட அவைத் தலைவர் எஸ்.குணசேகரன் தலைமையில் நடைபெற உள்ளது.

எனவே இக்கூட்டத்தில் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், தொகுதிப் பொறுப்பாளர்கள், கழக அணிகளின் மாநில நிர்வாகிகள், மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதி கழகச் செயலாளர்கள், ஒன்றியக் கழகச் செயலாளர்கள், தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்கள், அனைத்து அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள், வட்ட கழகச் செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் தவறாமல் பங்கேற்றுச் சிறப்பிக்க வேண்டுகிறேன்.

பொருள் : கழக ஆக்கப் பணிகள்

**அமைச்சர் மா.சுப்பிரமணியன்,**
செயலாளர், சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க.

---





தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் 73 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு திருவள்ளூர் மேற்கு மாவட்டம் திருத்தணி வடக்கு ஒன்றியம் பூனிமாங்காடு கிராமத்தில் மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. கிரிக்கெட் போட்டியை துவக்கி வைத்து வெற்றி பெற்ற அணிகளுக்கு பரிசுகள் வழங்கினார். உடன் திருத்தணி வடக்கு ஒன்றிய பொறுப்பாளர் ஏ.எல். விஜயகுமார் மற்றும் கழக நிர்வாகிகள் விளையாட்டு வீரர்கள் பலர் கலந்து கொண்டனர்.